# தீபாவளியன்று எது இன்பம்?

குருசாமி மணிவண்ணன்

உயிருக்கு உணர்வூட்டி

உணர்வுக்கு உயிரூட்டும்

என்னரும் தமிழ்த் தாய்க்கு

முதல் வணக்கம்!

ஆஹா என்ன இது?

உடலைத் துளைத்து

எலும்பை எட்டும் குளிரா?

அங்கங்கே

கொட்டிக் கிடக்கும்

கொடும் பனியா?

அதனாலென்ன?

இங்கே...

நடமாடும் ஓவியங்கள்

கால் முளைத்த கவிதைகள்

மலரணிந்த மலர்கள்.......ஓ..

புன்னகை பூத்த

எம் தமிழ்ச் சொந்தங்கள்!

இருளகற்றி

நம்பிக்கை நட்சத்திரங்களை

நலமாய் வழங்கும்

நன்னாளை

இணைந்து கொண்டாட

இனிமையாய்க் கூடிய

அனைவருக்கும் அள்ளக் குறையா

அன்பு வணக்கங்கள்!

தீபாவளியே இன்பம்!

அதில் எது மேலும் இன்பம்?

கேள்விக் குறியாய் நண்பர் கார்த்திக்!

அள்ளக் குறையா

அருஞ்சுவை உணவை

தள்ளாது அனுபவித்தல் இன்பம்!

தேனாய்க் கூறினார் தேன்மொழி!

ஆள் பாதி ஆடை பாதி

ஆமாம் - மில்வாக்கி குளிருக்கு

மிகப் பொருந்தும்!

அழகூட்டும் ஆடைகள் மேலுமின்பம்!

அழகாய்க் கவி பாடினார் உமா செந்தில்!

பாட்டே பட்டாசாய் வெடிக்க

பாய்ந்து வந்தார் நண்பர் பாலு!

அருமையான உறவே இன்பம்!

மறுக்க வில்லை

ஆன்றோரின் கவிதைகளை!

என் நிறைவுக் கவிதை

கேள்விகளை நிறைவாக்கும்!

தீபாவளியன்று எது இன்பம்?

எது பேரின்பம்?

சற்றே எண்ணப் பறவை

சிறகடிக்கட்டும்!

உலகக் கலாச்சாரங்கள்

பண்பாடுகள், கலைகள்

ஓடி விழுந்து

உருகி உருமாறும்

உருகும் பானையில் - வட அமெரிக்க

உருகும் பானையில் - வாழ்கிறோம்!

நரகாசுரனை அழித்த நாளா?

கோடானு கோடி வளங்களை

கொட்டிக் கொடுக்கும்

இலக்குமியின் பிறந்த நாளா?

கஸ்டப் படவே பிறந்த

பாண்டவர்கள் வனவாசம் முடிந்த நாளா?

பாலி மன்னன்

ஆண்டொன்றுக்கு

ஆர்வமுடன் புவிக்கு வர

வழி காட்டும் நன்னாளா?

ஆம் - அனைத்தும் சேர்ந்த

நன்னாள் இன்னாள் - தீபாவளி!

அதிகாலையில் நன்னீராடி

அழகுடைகள், ஆரங்களணிந்து

மத்தாப்பூவாய் மகிழ்ச்சி பொங்க

ஆயிரமாயிரம்

விளக்குகள் ஒளி சிந்த

வண்ண வண்ண உணவுகளை

சேர்ந்தோர்க்குப் பரிமாறி

களிப்பது ஏன்?

ஏற்றிய விளக்குகள்

ஒளியீந்தத் தானா?

நம்பிக்கைக்கும் தானே!

ஒற்றுமைக்கும் தானே!

பூக்களாய் சொரியும்

மத்தாப்பூக்கள்

மகிழ்ச்சியை வெளிக் கொணரத் தானே!

ஓடுகின்ற வாழ்க்கைச்

சக்கர எலிகளுக்கு

சற்றே ஓய்வெடுக்க

அன்றாட 'வலி' மறந்து

பாலைவனச் சோலையாய்

வாழ்வின்

மகிழ்வுத் துணுக்குகளாய்

வந்ததே பண்டிகைகள்!

திருவிழாக்கள்!

எது இன்பம்?

அம்மா வருவது இன்பம்

குழந்தைக்கு!

ஆதவன் வருவது இன்பம்

மலருக்கு!

அறத்தால் வருவது இன்பம்

துறவிக்கு!

அத்தான் வருவது இன்பம்

துணைவிக்கு!

பாஸ் கிடைத்தால் இன்பம்

மாணவருக்கு!

பெயில் கிடைத்தால் இன்பம்

அரசியல் வாதிக்கு!

கொளுத்தும் கோடையில்

குளிரே இன்பம்!

கொட்டும் மழையில்

குடையே இன்பம்!

குத்தும் குளிரில்

சூடே இன்பம்!

எண்பதுகளில் -

கண்ணதாசன் பாட்டெழுத

எம்.எஸ்.வி இசையமைக்க

டி.எம்.எஸ்-சுசீலா பாடியது

இன்பத்துள் பேரின்பம்!

பின் -

வைரமுத்து பாட்டெழுத

இளையராஜா இசையமைக்க

எஸ்.பி.பி - சித்ரா பாடியது

மேலும் பேரின்பம்!

அறியாமை இருளகற்ற

நம்பிக்கை ஒளியேற்ற

தீபாவளித் திருநாள் வேண்டும்!

உயிருக்கும் உடலுக்கும்

நலன் பயக்கும்

நல்லுணவு

புத்தாடை அணிந்து

புசித்தல் இன்பம்!

தன் வட்டம் மற்றுமின்றி

உறவு வட்டம் உடனிருத்தல்

இன்பத்துள் பேரின்பம்!

அதற்குச் சாட்சி

நம் தமிழ்ச் சங்க

தீபாவளித் திருநாளே!

வாய்ப்புக்கு நன்றி